யாழ்ப்பாணம்

முஸ்லிம் - தமிழர் முறிவுக்கு அரசே பொறுப்பு

(லண்டன்)

''ஒற்றுமையாக இருந்த தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் முரண்பாடுகளை முறுகல்நிலையை ஏற்படுத்தியதே சிறிலங்கா அரசு'' என்று விடுதலைப் புலிகள் இயக்கப்

(4ம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 23 இதழ் 8

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 05 – 05 – 1992

இத்தாலியில் எட்டு தமிழ்இளைஞர்கைது

(ரோம்)

இத்தாலியில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 8 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ரோம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

[4–ம் பக்கம் பார்க்க]

ஜனாதிபதி படுகொலை சதித்திட்டம் தொடர்பாக விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸாவை படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக எழுந்த செய்திகுறித்து அரச அதிகாரிகள் தற்பொழுது விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ஜனாதிபதி பிரேமதாஸாவை படுகொலை செய்யவோ கடத்திச்செல்லவோ அல்லது அவர் மீது நச்சுதிராவகமோ வீச சதித்திட்டம் தீட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில்

அரசின் சூழ்ச்சித் திட்டங்களே படுகொலைகளுக்குக் காரணம்!

திலகர் பி.பி.ஸி.க்கு தகவல்

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் அரசின் திட்டமிட்ட சூழ்ச்சி திட்டங்களே அங்கு படுகொலைகள் இடம்பெறக் காரணம் என்று விடுதலைப்புலிகள் இயக்க பிரமுகர் லோறன்ஸ் திலகர் பி. பி. ஸி.க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் கொலைகளுக்கும் அரசு தான் தில் எவ்வித உண்மையு [illegible] தெரிவித்துள்ளதாவது; காரணமாக இருக்கிறது மில்லை. இது அரசாங்கத்தி கிழக்கு மாகாணத்தில் அண் இந்த கொலையை விடுதலைப் னது மி நுணுக்கமான திட்ட மையில் இடம் பெற்ற படு புலிகள் செய்தார்கள் என்ப

(4ம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை வழக்கு சென்னையில் ஆரம்பம்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு சம்பந்தமான விசாரணை சென்னை நீதிமன்றில் வெகுவிரைவில் அரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய சட்டமா அதிபர் ராமசாமி தலைமையிலான குழு குற்றப் பத்திரிகையை இப்பொழுது பூர்த்தி செய்யும் நிலையிலுள்ளது. (கே)

தமிழ்நாடு சட்டப்பேரவை இந்திய உயர்நீதிமன்றம் இழுபறி

(சென்னை)

இந்திய உயர் நீதிமன்றத்துக்கும் தமிழ்நாடு சட்டப் பேரவைக்குமிடையில் பத்திரிகை ஆசிரியர் சம்பந்தமான [illegible] தில் முரண்பாடு வலுப்பெற்று வருகிறது.

இந்திய உயர்நீதிமன்றத்தின் வேண்டுகோளுக்கேற்ப தமிழ் நாடு சட்டப்பேரவை செயலாளர் ஆஜராகக்கூடாது என்று தமிழக சட்டப் பேரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கோவை. மாலை முரசு ஆசிரியர் சேரன் சுந்தரும்,

(4–ம் பக்கம் பார்க்க

தாயகம் திரும்பிய இருவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய அகதிகளில் மேலும் இருவர் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிவராசா குணேஸ்ரவன், என்பவர் வேப்பங்குளம் அகதி முகாமிலும், கதிரேசன

(4–ம் பக்கம் பார்க்க)

25 தமிழ் இளைஞர்கள் வவுனியா நகரில் கைது

[யாழ்ப்பாண ம்]

வவுனியாவில் கடந்த இருதினங்களில் 25 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா நகரில் நடமாடு

(4–ம் பக்கம் பார்க்க)

பொலிஸ், இராணுவ நிலையங்கள் கிழக்கில் விஸ்தரிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொலிசாரும், இராணுவத்தினரும் தமது முகாம்களையும், நிலையங்களையும் விஸ்தரித்து வருகின்றனர்.

கலமடு, மஞ்சந்தொடுவாய் பகுதிகளில் அண்மையில் இந்த விஸ்தரிப்பு நடவ

[4ம் பக்கம் பார்க்க]

பதுளையில் காணாமல்போன 14 தமிழரின் விபரங்களை இ. தொ. கா. கோரியுள்ளது

(கொழும்பு)

பதுளை மாவட்டத்திலிருந்து காணாமற்போன 14 தமிழர்களின் நிலை பற்றிய விபரங்களை ஜனாதிபதியிடம் இ. தொ. கா. கோரியுள்ளது.

இது குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இ. தொ. கா. ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

இவர்களை விட மலையகப் பகுதிகளில் கைது செய்யப்பட்ட சுமார் 50 தமிழர் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (சி)

வாழைச்சேனை இந்துக்கல்லூரியில்பயிலும் 6மாணவிகள்உட்பட 13தமிழர் முஸ்லிம் படையால் கடத்தல்

(வாழைச்சேனை)

வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் 6 மாணவிகள், ஒரு வயோதிபமாது, 2 சிறுவர்கள் உட்பட 13 தமிழர்கள் முஸ்லிம் ஊர்காவல்படையினரால்வாழைச்சேனை காகித நகரில்வைத்து கடத்திச் செல்லப்பட்டனர்.

அழுஞ்சிப் பொத்தானை உட்பட சில கிராமங்களில் இடம்

(4ம் பக்கம் பார்க்க)

சிங்களவர், முஸ்லிம்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்க பாதுகாப்பு அமைச்சு முடிவு!

(கொழும்பு)

வடக்கு–கிழக்குப் பகுதியில் உள்ள சிங்கள, முஸ்லிம் கிராமவாசிகளுக்கு ஆயுதங்கள் வழங்கி அவற்றில் பயிற்சியளிக்க பாதுகாப்பு அமைச்சு முடிவுசெய்துள்ளது.

மேற்படி இரு சமூகவாசிகளை தவிர, ஊர்காவல் படைக்கும், பொலிசாருக்கும் விசேடபயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

சிங்கள, முஸ்லிம் கிராமவாசிகளை ஆயுதபாணிகளாக்கி இப்பகுதிகளில் காவல்கடமைகளில் ஈடுபடுத்துவதே அரசின் திட்டமெனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (சி)

பொலநறுவையில் 146 பேர் வீடுகளை இழந்தனர்

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களில் 146 பேர் தமது வீடுகளை இழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில்தமிழர்களின் வீடுகளே கூடுதலாக சேதமாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

முஸ்லிம் ஊர்காவல் படையினரும் ஆயுதம்ஏந்திய முஸ்லிம்களுமே தமிழர்களின் வீடுகளைச் சேதமாக்கினர். (ரி)

வரி விளம்பரம்

தேவை

கிறீன் சியஸ் ரெயிலறிங் ஸ்தாபனத்திற்கு உடுப்புகள் தைக்கக்கூடிய ஆண்கள் தேவை. தொடர்பு கொள்ளவர்: கிறீன் சியஸ் ரெயிலறிங், மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி 6255)

யாருடையது

24-04-92 வெள்ளிக்கிழமை அறு பஸ்ஸில் பிரயாணம் செய்கபோது ஊரிக்காட்டில் என்னிடம் ஒப்படைத்த பொருளை நந்து பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: சி. பிரதாபன், 6/2, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஏ-2110)

நோவுவைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவுஎண்ணை கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6256)

சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் யாவற்றையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேடகழிவும், மாணவர்களுக்கு விசேட சலுகையும்வழங்கப்படும். 'சோபிதா' புத்தகசாலை. இல. 363, காங்கேசன்துறை வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (எ-2106)

கூட்டணி பிரமுகர்கள் நாடு திரும்புவர்

[கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கியஸ்தர்களான மு. சிவசிதம்பரம், வீ. ஆனந்தசங்கரி, எஸ். சம்பந்தன் ஆகியோர் அரசியலில் ஈடுபடுவதற்காக நாடு திரும்பவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தியாவில் தங்கியுள்ள இவர்கள் விரைவில் நாடு திரும்பி அரசியலில் ஈடுபடுவர் என்று கூட்டணி வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (ரி)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

சாகித்திய விழாவில் புலவருக்கு பட்டமளிப்பு

(கொழும்பு)

1992ன் தமிழ் சாகித்திய விழாவில் புலவர் நா. சிவபாதசுந்தரனார், தமிழுக்கு ஆற்றிய சேவையைப்பாராட்டி 'தமிழ் மணி' என்றபட்டமும், பொற்கிளியும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்க இந்துசமய கலாசார அமைச்சு முன்வந்துள்ளது.

இவ்விழா 10ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இப்பாராட்டை பிரதமர் டி. பி. விஜயதுங்க புலவருக்கு வழங்குவார். (சி)

அரசியல் தீர்வை

அரசு முன்வைக்கவேண்டும்

(கொழும்பு)

''இனப்பிரச்னைக்குஅரசியல் தீர்வை ஐக்கிய தேசியகட்சி அரசாங்கம் முன் வைக்க வேண்டும்''

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற எதிர்கட்சியினரின் மேதின ஊர்வலத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைமையில் நடைபெற்ற இவ்வூர்வலத்தில் லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை சம்யூனிஸ்ட் கட்சி, எம்.ஈபி, தேசிய விமுக்தி ஜனதாபக்ஷய இலங்கை மக்கள் கட்சி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய கட்சிகள் இணைந்து நடாத்தின.

ஐக்கிய தேசியக்கட்சியின் 'மே' தின ஊர்வலத்தில் இன ஐக்கியத்தை வலியுறுத்தும் ஊர்திகள் இடம் பெற்றிருந்தன எனத் தெரியவருகிறது.

14 சனசமூகநிலையங்களுக்கு நன்கொடைப்பணம்

[வட்டுக்கோட்டை]

வலிமேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 55 பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்களில் 14 சனசமூக நிலையங்களுக்கே இவ்வாண்டு நன்கொடைப் பணம் வழங்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை உப அலுவலகத்தைச் சேர்ந்த 13 சனசமூக நிலையங்களில் 4 சனசமூக நிலையங்களுக்கும், சுழிபுரம் உப அலுவலகத்தைச் சேர்ந்த 23 சனசமூக நிலையங்களில் 7 சனசமூக நிலையங்களுக்கும், அராலி உப அலுவலத்தைச் சேர்ந்த 13 சனசமூக நிலையங்களில் 3 சனசமூக நிலையங்களுக்குமாக மொத்தம் 14 சனசமூக நிலையங்களுக்கே நன்கொடைப் பணம் வழங்குமாறு வலிமேற்குப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தரினால் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகஉள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறியக்கிடக்கின்றது.

வலிமேற்குப் பிரதேசசபைக் குட்பட்ட சங்கானை உப அலுவலகத்தைச் சேர்ந்த 7 சனசமூக நிலையங்களில் ஒரு சனசமூக நிலையத்திற்கும் இந்த நன்கொடைப்பணம் வழங்கப்படமாட்டாது. இங்குள்ள சனசமூகநிலையங்களில் ஒன்றாவது, சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரினால் சிபார்சு செய்யப்படவில்லையெனபது குறிப்பிடத்தக்கது.

வலிமேற்குப் பிரதேச சபைபிரிவில் கடந்த சுற்றங்களில் மிகச் சிறந்த சனசமூக நிலையங்களாக மதிக்கப்பட்டு 'ஏ' பிரிவுக்கான நன்கொடைப் பணத்தைப் பெற்றுவந்த பல சனசமூக நிலையங்கள் இம்முறை நன்கொடைப்பணம் பெறாதிருப்பது குறித்து சனசமூக நிலைய வட்டாரங்களில் பெரும் கவலை தெரிவிக்கப்படுகிறது. — 139

உற்சவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை புங்கன்குளம் வீதி வில்வையடி அருள்மிகு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் மே மாதம் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-00 மணிக்கு நடைபெறும்.

இராசி பலன்

05/05/1992

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு சித்திரை 22)

திருதியை: மு. .. 8.16 வரை.

ரோகினி; பி. ப. 12.52 வரை.

அமிர்தசித்தயோகம்: இராகுகாலம் பகல் 2.56 முதல் 4.26 வரை.

சுபநேரம்: காலை 10.26 முதல் 11.56 வரை.

மேடம்: நற்கருமம், வேலை பழு, குடும்ப கவலை

இடபம்: எதிர்பாராத செலவு, இனசனவருகை, பயம்.

மிதுனம்: பெண்களால் நன்மை, அதிகபிரயாசம், அலைச்சல்.

கடகம்: குடும்ப மகிழ்ச்சி, புதிய யோசனை, தொழில் லாபம்.

சிங்கம்: காரியசித்தி, பெரியவர் சந்திப்பு, பணவரவு.

கன்னி: தொழில் விரயம், குடும்ப பகை, வேண்டாத தொல்லை.

துலாம்: மனக் குமுறல், பெற்றோர் சச்சரிப்பு, கடன் சுமை.

விருச்சிகம்: அதிகார போட்டி, சுறுசுறுப்பு, பாராட்டு

தனுசு: குடும்ப நன்மை, அதிகாரிகள் நன்மை, தான தர்மம்.

மகரம்: தப்பபிப்பிராயம், காரியதடை அன்னியர் தொல்லை.

கும்பம்: குடும்ப பிரிவு, கருத்து வேற்றுமை, மனச்சுமை.

மீனம்: எதிர்பாராத உதவி, வெற்றிக்களிப்பு, மனமாற்றம்.

— ஜோஸ்யர்

சன்மார்க்கசபை

குரும்பசிட்டி



சன்மார்க்கசபைத் தலைவரும், வடமாநில கூட்டுறவு பாட பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கலாகேசரி கலாலய இயக்குனரும், சித்திர சிற்பக் கலைஞருமான

கலாகேசரி,

ஆ. தம்பித்துரையின்

மணிவிழா

இடம்:- கம்பன்கோட்டம், நல்லூர்

காலம்:- 09-05-1992 சனிக்கிழமை காலை 9-00 மணி

தலைமை:- தலை பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி, பரமேஸ்வரா முன்னாள் அதிபர் திரு. எஸ் சிவபாதசுந்தரம், கலாநிதி சி. க. சிற்றம்பலம், திரு. இரா. சுந்தரலிங்கம், திரு. ஆ. மகாலிங்கம், செம்பியன்செல்வன் கலாநிதி சோ. கிருஸ்ணராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கி உரையாற்றுவர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-6253)

க. விஸ்வநாதன்,
கௌரவ செயலாளர்.

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்

விசேட பொதுக்கூட்டம்

23 - 05 - 1992

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 23 - 05 - 1992 - ம் திகதி சனி கிழமை காலை 10-00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் (பி. எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். தவறாது சகல பொதுச் சபை உறுப்பினர்களும் இக்கூட்டத்துக்குச் சமுகமளித்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூட்டுறவுச் சேவையில்,
செயலாளர்.

(ஏ 2112)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை

மக்கள் மயப்படுத்துதல்

சுயவிருப்பத்தின் அடிப்படையில் இளைப்பாறல்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை மக்கள் மயப்படுத்துதல் என்ற தீர்மானத்துக்கு இலங்கை புலமுல்லை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள நஷ்டஈட்டைப் பெற்றுக்கொண்டு சுய விருப்பத்தின் அடிப்படையில் இளைப்பாறக்கூடிய சந்தர்ப்பம் இத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு சேவைப் பணிக்கொடை கொடுப்பனவுகள், சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் இருந்து கிடைக்கக்கூடிய கொடுப்பனவுகளை இவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் சுய விருப்பத்தின் அடிப்படையில் இளைப்பாற விரும்பும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை 1992 - 06 - 15ம் திகதிக்கு முன்பு தொழிற்சாலை முகாமையாளர் ஊடாக ஆளணி முகாமையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இத்திட்டம் சம்பந்தமாக மேலதிக விபரங்களை தலைமைக் காரியாலயத்தில் தொழிற்சாலை முகாமையாளரிடம் அல்லது காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை நிர்வாக முகாமையாளரிடம் அறிந்து கொள்ளலாம்.

— பொது முகாமையாளர்

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்,
130, W. A. D., இராமநாதக்க மாவத்தை,
கொழும்பு-02; [ஏ 2111]

15-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
22-12-27

★

இறப்பு:
05-05-77

அமரர் கந்தர் சின்னப்பு

(முன்னாள் யாழ். கச்சேரி லிகிதர்)

ஆண்டுகள் பதினைந்து கடந்துவிட்ட போதிலும்
எம் நெஞ்சங்கள் உம்மை மறக்கவில்லை
அமைதியில் நாம் உம்மை தியானிக்கையில்
எம்துயர் பிறர் அறியாவிட்டாலும்
என்றும் உம் நினைவு
எம் மனதில் பேணப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.

100, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (சி-6245)

சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர் கடத்திச் செல்லப்பட்டு கொலை

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியினர் நடாத்திய பாதயாத்திரையை ஒழுங்குசெய்த முக்கியஸ்தர்களில் ஒருவரை இனந்தெரியாத கும்பல் ஒன்று கடத்திச் சென்று சித்திரவதைசெய்து படுகொலைசெய்துள்ளதாக சுதந்திரக்கட்சி எம். பி. திரு. மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் கமகந்த என்னும்கிராமத்தைச்சேர்ந்த சுதந்திரக்கட்சி முக்கியஸ்தரான ரூபசேன வீரதுங்கவே இவ்வாறு படுகொலைசெய்யப்பட்டவராவார்.

பாத யாத்திரை முடிந்த ஓரிரு தினங்களின்பின் இவரது வீட்டில் வான் ஒன்றில் வந்த 6 பேர்கொண்டகோஷ்டி இவரைக் கடத்திசசென்று சித்திரவதைசெய்து படுகொலை செய்துள்ளது. மறுநாள் இவரது 'கிராமத்திற்கு அண்மையில் உடல் முழுவதும் பெரிய காயங்களுடன் நிர்வாணமான நிலையில் இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ராஜபக்ச தெரிவித்துள்ளார். (சி)

★ தங்கம் கடத்திய கடற்படை உயர் அதிகாரியும் படத் தயாரிப்பாளரும் கைது

(கொழும்பு)

தங்கக் கடத்தலில் ஈடுபட்ட கடற்படை உயரதிகாரி ஒருவரும் பிரபல திரைப்பட தயாரிப்பாளர் ஒருவரும் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து பிடிபட்டனர்.

சிங்கப்பூரிலிருந்துகொழும்பு வந்த இவர்கள் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், கட்டிகளை கடத்திவந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக இவர்களைக் கைதுசெய்த சுங்கப் பிரிவினர் இவ்விருவருக்கும் தலா 15 லட்சம் ரூபா தண்டப்பணம் கட்டுமாறு உத்தரவிட்டதுடன் இவர்களிடமிருந்த மேற்படி பொருட்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

கடற்படைஅதிகாரிகுறித்து பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. [சி]

உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ சுதர்சன சக்கர வழிபாடும் ஸ்ரீ இராமனுஜர் ஜெயந்திஉற்சவமும் நாளை மறுதினம் 7 ம் திகதிகாலை ஏழு மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

பகல் 12-00 மணிக்கு அன்னாபிஷேகம் அன்னதானமும் நடைபெறும். (சு)

அம்பாறை மாவட் த்திற்கு தமிழ் அரசாங்க அதிபர் நியமிக்கப்படவேண்டும்

(மட்டக்களப்பு)

அம்பாறைமாவட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபராக தமிழர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும்'' இவ்வாறுஅம்பாறைமாவட்ட தமிழர் மகாசங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிட்டிருப்பதாவது மீளக்குடியமரும் தமிழ் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்,

மீளக்குடியமரும் மக்களின் மாதாந்த வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்ளும்வரை அக்குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்களை வழங்கச்செய்தல்

மீளக்குடியமர்த்தும் குடும்பங்களுக்கு விசேட குடியமைப்பு செய்தல் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியதாக மகஜர் இருந்தது என அறிய வருகியது. [சு]

'நக்கீரன்' பத்திரிகை பல இடங்களில் எரிப்பு

[சென்னை]

'நக்கீரன்' வார இதழ் தமிழகத்தில் பல இடங்களிலும் தொடர்ந்தும் பறிக்கப்பட்டு எரிக்கப்பட்டு வருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

ஜெயலலிதா அரசுக்கு எதிராக பல உண்மைகளை அம்பலப்படுத்திவரும் 'நக்கீரன்' வார இதழ் கடந்த ஒருமாத காலத்தில் தமிழகத்தின் பல இடங்களிலும் அ. தி. மு. க. குண்டர்களால் பறிக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் பின்னணியில் கடந்த வருடம் இப்பத்திரிகைக் காரியாலயம் அடித்து நொருக்கப்பட்டு இருவர் படுகொலை செய்யப்பட்டதும் தெரிந்ததே. (சி)

தபால் தலையில் சாதனை

(பெங்களூர்)

திருப்பதியைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு மாணவர் ஒருவர் தபால் தலையில் பத்தாயிரத்து 39 எழுத்துக்களை எழுதி சாதனை புரிந்துள்ளார்.

எஸ்.சுரேஸ் பாபு என்ற மாணவர் 21X18 மில்லி மீற்றர் என்ற அளவுள்ள தபால் தலையில் எவரது உதவியுமின்றி திருப்பதி வெங்கடேச பெருமானின் கதையை எழுதியுள்ளார்.

மேதின ஊர்வலத்தில் 'கறுப்புபூனை' வேடதாரிகள்

(கொழும்பு)

'கறுப்புப் பூனைகளால்'' 1988-89 ஆண்டுகளில் பல பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதை நினைவூட்டும் வகையில் இந்த முறை நடந்த மே தின ஊர்வலத்தில் 'கறுப்பு பூனை'வேசம் அணிந்த பலர் ஆங்காங்கே கட்சி கொடுத்துள்ளனர்.

அரசு எதிர்ப்பு கோஷமெழுப்பி சென்ற ஊர்வலத்திலே இந்த 'கறுப்பு பூனைகள்' வேடம் பலரது பேச்சுக்கும் பார்வைக்கும் இலக்காகியதாக தெரிவிக்கப்படுகிறது.

இவேவேளை காலிமுகத்திடலில் பிரேமதாசாவின் ஆதரவாளர்களால் 80 அடி உயரமுள்ள பிரேமதாசாவின் 'கட் அவுட்' படம் ஒன்றும் நிறுவப்பட்டிருந்தது. (கே)

தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு

(யாழ்ப்பாண')

தமிழீழ மீட்பு நிதிக்கு கடனளித்தோரில் தேர்ந்தெடுக்கப்பட்ட 536 பேருக்கு கடன் மீளளிப்பு இம்மாதம் 16ம்,17ம் திகதிகளில் நடைபெறும்.

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு பெறுபவர்கள் இலக்கம் வருமாறு:

யா/ந/1281,	யா/ந/3164,	யா/ந/2006,	யா/ந/3359,
யா/ந/4548,	யா/ந/4620,	யா/ந/4795,	யா/ந/5032,
யா/ந/990,	யா/ந/3268,	யா/ந/5814,	யா/ந/5819,
யா/ந/4605,	யா/ந/4851,	யா/ந/87,	யா/ந/1245,
யா/ந/871,	யா/ந/1014,	யா/ந/1448,	யா/ந/5536,
யா/ந/1387,	யா/ந/2459,	யா/ந/387,	யா/ந/3957
யா/ந/2844,	யா/ந/3984,	யா/ந/906,	யா/ந/3348,
யா/ந/581,	யா/ந/1948,	யா/ந/4145,	யா/ந/2528,
யா/ந/4874,	யா/ந/41,	யா/ந/4200.	
யா/ந/139,	யா/ந/595,	யா/யா/537,	யா/யா/1370,
யா/ந/4725,	யா/ந/391,	யா/யா/1439,	யா/யா/1828,
யா/ந/774,	யா/ந/1593,	யா/யா/3611,	யா/யா/661,
		யா/யா/1204,	யா/யா/3491,
		யா/யா/129,	யா/யா/135,
		யா/யா/782,	யா/யா/785,
		யா/யா/920,	யா/யா/3216,
		யா/யா/72,	யா/யா/111,
		யா/யா/141,	யா/யா/4173,
		யா/யா/148,	யா/யா/945,
		யா/யா/2949,	யா/யா/83
		யா/யா/879,	யா/யா/4014,

(தொடரும்)

கடனுதவி

[கொழும்புத்துறை]

கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் சுய தொழில் வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்கு முன்னோடியாக பத்தாயிரம் ரூபா பிரதேச செயலகத்தில் உதவி அரச அதிபர் கெக்டர் யோசப் பினால் வழங்கப்பட்டது. 13 அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறையில் இக்கடனுதவி வழங்கப்படுமென்று சங்கச் செயலாளர் செல்வி சிவப்பிரகாசம் தெரிவித்தார். — 154

விடுதலைப் புலிகள்

கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

தமிழிசை விழா

இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதி.

நாலாம் நாள்

05-05-1992 செவ்வாய்க்கிழமை

நிகழ்ச்சிகள்

மாலை 5-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை

மங்கள இசை

நாதஸ்வரம்	தவில்
திரு. ஏ. பாலசுதந்திரன்	திரு. ஏ. சின்னக்கணேஸ்
திரு. வி. நகுலேஸ்வரன்	திரு. வி. ராமச்சந்திரன்
திரு. கே. நம்பிராஜன்	திரு கே. சச்சிதானந்தன்
திரு. கே. உதயநாதன்	திரு. கே. நாகேந்திரம்

6-00 மணி தொடக்கம் 7-00 மணி வரை பாட்டு

செல்வி ராதிகா சுப்பிரமணியம்	பாட்டு
செல்வி சாந்கநாயகி சுப்பிரமணியம்	வயலின்
திரு. எஸ். துரைராசா	மிருதங்கம்

7-00 மணி தொடக்கம் 8-00 மணி வரை பாட்டு

திருமதி மிதிலா விவேகானந்தன்	பாட்டு
திரு. எஸ். சர்வேஸ்வரசர்மா	வயலின்
திரு. கே. கண்ணதாசன்	மிருதங்கம்

8-00 மணி தொடக்கம் 8-30 மணி வரை

சிறப்பு விருந்தினர் உரை

செல்வி ஜெயா (பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி)

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

செல்வி ஜனனி (பொறுப்பாளர், செஞ்சோலை)

8-30 மணி தொடக்கம் 9-30 மணி வரை பாட்டு

திரு. எஸ். பத்மலிங்கம்	பாட்டு
திரு. பி. கண்ணன்	வயலின்
திரு. எம். சிதம்பரநாதன்	மிருதங்கம்
திரு. எஸ். மகேந்திரன்	கெஞ்சிரா

9-30 மணி தொடக்கம் 10-30 மணி வரை

நாதஸ்வரம்

நாதஸ்வரம்	தவில்
திரு. கே. எம். பஞ்சாபிகேசன்	திரு. கைதடி பழனிமலை
திரு. வி. கே. பஞ்சமூர்த்தி	திரு. ஆர். புண்ணியமூர்த்தி
திரு. எம். பி. நாகேந்திரம்	திரு. எஸ். முருகையா
	திரு. என். சுந்தரலிங்கம்

கலாகேசரி தம்பித்துரையின் மணிவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சனமார்க்க சபையினரால் நடாத்தப்படும் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின் மணிவிழா இன்று தொடக்கம் 9ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் விசேட பூசையும் அபிசேகமும் நடைபெறும்.

நாளை புதன்கிழமை பி ப. 3-30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் சன்மார்க்க நுண்கலை மன்றம், சித்திரச் சிறப்பப் பிரிவு அங்குரார்ப்பண வைபவம் இடம் பெறும்.

விழாவுக்கு கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமைவகிக்க மருதனார்மடக் கல்விப் பணிப்பாளர், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம், மல்லாகம் கிராமஅபிவிருத்திச் சங்கத்தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன், ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்

9ம் திகதி கம்பன்கோட்டம் நல்லூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் மகா ராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள், துர்க்கா துரந்தரி சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. ஆகியோர் ஆசியுரை வழங்க, கலாநிதி சி க. சிற்றம்பலம், இரா. சுந்தரலிங்கம், ஆ. மகாலிங்கம், செம்பியன்செல்வன் ஆகியோர் பாராட்டுரை வழங்குகிறார்கள். கலாநிதி சோ. கிருஷ்ணராசா சிறப்புரையாற்ற இருக்கிறார். (சு)

உதைபந்தாட்டம்:

2ம்சுற்று போட்டிகள் இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 2-ம் சுற்று ஆட்டங்கள், இன்றுமுதல் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் வலிகாமம் கிழக்குப் பிரிவில் குருநகர் பாடும்மீன் கழகமும், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும், வலிகாமம் மேற்குப் பிரிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கழகமும், திருமலை நட்சத்திரக் கழகமும், வடமராட்சி-தென்மராட்சி இணைந்த பிரிவில் சிவானந்தா கழகமும் நவசக்திக் கழகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறும். லீக் முறையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் முகத்தைஎதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கழகம் மோதும். (வி)

சிரமதானப் பணி

(கொழும்புத்துறை)

மூளாய் இந்து இளைஞர் மன்றம் மூளாய் வரதன் புலோ சித்தி விநாயகர் ஆலயத்தில் சிரமதானப்பணி மூலம் ஆலயத்தின் பூந்தோட்டத்தைத் துப்பரவு செய்தும், ஆலயத்தைச் சுத்தம் செய்தும் பக்தர்களுக்கு உதவினர் என மன்றச் செயலாளர் திரு. இ இரஞ்சிதகுமார் தெரிவித்துள்ளார். (154)

வடக்கு—கிழக்கு இணைப்பு இன்றேல்

தீர்வு முயற்சியிலிருந்து தமிழ்க் கட்சிகள் விலகும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு அரசியல் தீர்வுகாணத்தவறும் பட்சத்தில் இனப்பிரச்னை தீர்வு முயற்சிகளிலிருந்து தமிழ் கட்சிகள் ஒதுங்க முடிவு செய்துள்ளன.

தீர்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சில பெரிய கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சில தினங்களுக்கு முன்னர் ஒன்று கூடி வடக்கு கிழக்கு இணைப்பைஎதிர்க்க தீர்மானித்திருப்பதாக கூறப்படுகிறது.

வடக்கு-கிழக்குஇணைப்புக்கு இக்கட்சிகளின்ஆதரவு கிடைக்காவிட்டால் தீர்வு விடயத்தில் மேலும் ஒத்துழைப்பதிலும் பங்கு கொள்வதிலும் அர்த்தமில்லை என்று தமிழ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு கிழக்கு இணைப்பில்லாமல் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு இல்லை. நாடாளுமன்றத்தெரிவுக்குழு கூட வடக்கு கிழக்கு இணைப்பிலிருந்து தவறினால் தெரிவுக்குழுவில் தாம் தொடர்ந்து அங்கம் வகிப்பதில் எந்தவித பயனுமில்லை என்று தமிழ் கட்சிகள் தெரிவித்துள்ளன.

வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்தி ஏழு தமிழ் கட்சிகள் கூட்டாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் கோரிக்கை விடுத்தது தெரிந்ததே. (ரி)

விரைவில்!

ஷப்ரு கிண்ணத்துக்காக

ஜொலி ஸ்ரார்ஸ்

விளையாட்டுக் கழகம் நடத்தும்

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்

கிரிக்கெட் போட்டித் தொடர்

விபரங்களுக்கு:- ஷப்ரு,

யாழ்ப்பாணம்.

[ஏ-2113]

31ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்லத்துரை இலகுநாதன்

அன்னையில் கையிளி: 17-3-1951 ஆண்டவன் மத்தியில்: 5-4-1992

நிராறும்புலன் சேர்ந்த திருநீலகண்டனை
ஆராது தொழுது உன்
பாரத விந்தம் பதவிசேர்ந்த நன்னாளை எண்ணி
ஆதாரம் இன்றி அலறுகிறோம் ஐயா

அன்பின் பிறப்பிடமாய்த் திகழ்ந்து எம்மை
எல்லாம் இன்பங்கண்டு களிக்கும் வேளையில்
எங்களையெல்லாம் நொடிப்பொழுதில் கைவிட்டும்
சென்றீரே கருணையும் அன்பும் ததும்பும்
உங்கள் திருமுகம் எம்நெஞ்சை விடகலாது
ஆண்டுகள் பல ஓடினும் உம்நினைவாய்
எம்மனமும் உம்நினைவோடு ஓடி
எம் வாழ்வைக் கழித்திடுவோம் விநாயகனைத்
துதித்திடுவோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புள்ள மனைவி, சகோதரர்கள்,
மாமன், மாமி,
மைத்துனர், உறவினர்கள்.

ஈவினை
புன்னாலைக்கட்டுவன் (சி;6157)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சுன்னாகோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81

கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட விளையாட்டுப் போட்டி கல்விக் கண்காட்சி போன்ற விடயங்களை ஆராய்வதற்கான கூட்டம் நாளை 6-ம் திகதி காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

சகல கோட்டங்களையும் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களையும் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். [சு)

வாழைச்சேனை

(1-ம பக்கத் தொடர்ச்சி)

பெற்ற படுகொலைச் சம்பவங்களை அடுத்து மேற்படி கடத்தலும் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களில் ஒரு சிறுவன் வெட்டுக்காயங்களுடன் தப்பியோடிவந்து இராணுவத்திடம் நடந்ததைக் கூறினான்.

"காகித ஆலை பதிமருந்துத் தோட்டத்தினுள் விறகு பொறுக்கச் சென்ற எங்களை முஸ்லீம் ஊர்காவற்படையும் இன்னும் பலரும் ஆயுதங்களுடன் வந்து கடத்திக் கொண்டு காவத்தமுனை ஊர்ப்பக்கம் கொண்டுசென்ற போது நான்மட்டும் அவர்களின் பிடியிலிருந்தும் தாக்குதல்களிலிருந்தும் தப்பியோடி வந்தேன்" என்று அந்தச்சிறுவன் தெரிவித்தான்.

இதனையடுத்து மேஜர் விக்கிரமசிங்கவின் தலைமையில் இராணுவத்தினர் சுற்றியுள்ள காடுகளிலும், காவத்தைமுனைக் கிராமம் ஆகியவற்றிலும் இராணுவ வாகனங்கள் சகிதம் தேடுதல் நடத்தினர்.

ஓட்டமாவடி, மீராவோடை வாழைச்சேனை ஆகிய பகுதிகளிலுள்ள பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிமூலம் கடத்தப்பட்டவர்களை உடன்விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ரி)

பொலிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை இடம்பெற்றது.

கல்மடுவில் இராணுவமுகாமும், மஞ்சந்தொடுவாயில் பொலிஸ் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளிலுள்ள தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்ட பின்னரே இந்த விஸ்தரிப்பு நடைபெறுகின்றது. [ரி]

கட்டிடம் இடிந்துவிழுந்து 75 பேர் கஷ்மீரில் பலி

(சிறிநகர்)

ஜம்மு காஷ்மீரில் சிறிநகரிலுள்ள லாலபசார் பகுதியில் ஒரு வீட்டின் கொங்கிறீட் பாலம் ஒன்று நேற்றுபகல் அப்படியே சரிந்து விழுந்ததன் விளைவாக 75 பேர் பலியாகினர்.

இதில் அதிகமானோர் பெண்மணிகள் என்றும் 150 பேர் காயமுற்றதாகவும் தெரியவருகிறது,

மூன்று மாடிக்கட்டிடம் ஒன்றின் முதல்மாடி இடிந்து சரிந்து விழுந்ததில் கட்டிட அடித்தளத்தில் இருந்த அனைவருமே இடிபாடுகளுள் சிக்குண்டு புதைந்து பலியாகியதாக அறிவிக்கப்பட்டது.

ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட மரணத்தில் துக்கம் விசாரிக்க சென்ற பலர் அந்த மாடிக் கட்டிடத்தின் அடித்தளத்தில் கூடிநின்ற தருணத்தில் இத்துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

காயமுற்ற அனைவரும் சிறிநகரிலுள்ள பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்கள். (சே)

இத்தாலியில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்கள் கைது செய்யப்படும் போது இவர்களிடமிருந்து 5 கிலோஹெரோயினும் மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இந்த 8 தமிழ் இளைஞர்களும் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (சி)

தமிழ்நாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப்பத்திரிகைக்கு செய்தி சேகரித்து அனுப்பும் தினகரன் நிருபர் சௌந்தரராஜனும் [illegible] அவத்தலைவர் பிரபாகரனை கைது வாரண்ட் மீது உயர்நீதிமன்றம், பேரவைச் செயலாளர் இன்று ஆஜராக வேண்டுமென்று விடுத்த உத்தரவு அவையைக் கட்டுப்படுத்தாது என்றும் சட்டப் பேரவை தீர்மானித்துள்ளது.

பேரவைச்செயலாளர் தனிப்பட்ட முறையில் இயங்கமுடியாது என்றும் உயர் நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க அவர் ஆஜராகமுடியாது என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே)

25 தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான அனுமதி அட்டைகள் இல்லாத காரணத்திற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டனராம்.

இவர்களிடமிருந்த அனுமதி அட்டைகளை பொலிஸார் பறித்து கிழித்துவிட்டே இவர்களை கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த இரு தினங்களில் தாண்டிக்குளம சோதனை நிலையத்தில் தமிழ் பெண்களும் இளைஞர்களும் இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. [ரி]

தாயகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நவநீதன் தபால் கந்தோரிலும் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் தற்போது கொழும்பு மகஸீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். [ரி)

முஸ்லிம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகர் குற்றம்சாட்டியுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தினர் வடக்கையும் கிழக்கையும் பிரிக்க நினைக்கின்றார்கள். முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் பிரிக்க நினைக்கிறார்கள். அவ்வாறு பிரித்து அங்கு ஏற்படுகின்ற குழப்ப நிலையை பாவிக்கிறார்கள். அந்த ஏற்படுகின்ற இடைவெளிகளில் சிங்களவர்களை குடியேற்றுகிறார்கள். ஒரு நிரந்தரமான தீர்வுக்கும் இப்படியான குழப்பங்களை ஏற்படுத்த நினைக்கிறார்கள். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பிரச்னை என்பதனை விட தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பிரச்னை என்பதாக மிகவும் பூதாகரமாக காட்ட அரசு முயல்கிறது. இந்த அடிப்படையில்தான் திட்டமிட்ட செயல்வடிவிலும் இதனைச் செய்கிறார்கள்.

புலிகளின் குரல் புதிய சேவை

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலியில் இன்று காலை தொடக்கம் புதியசேவை ஆரம்பமாகிறது.

இன்று காலை 6-30 மணிக்கு ஆரம்பமாகி காலை 7 மணி வரை நடைபெறும் இச்சேவையில் பல நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

காலை 6-50 ற்கு செய்தி அறிக்கையும் புலிகளின் குரல் வானொலியில் தினமும் நடைபெறவுள்ளது.

கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டசெயலாக இருக்கிறது.

அரசாங்கம் தனத்திலுள்ள இராணுவத்தளபதிகளுக்கு இராணுவ நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கும் பணிப்புரைகளை, அதிகாரங்களை வழங்கிய பொழுதே இப்படியான படுகொலைகள் நடக்கும் என்று எதிர்பார்த்தோம் தென்பகுதியில் கறுப்பு பூனைகள் என்றும், கிழக்கு பகுதியில கரும் நாகங்கள் என்றும் அரசாங்கம் முன்னரும் இத்தகைய படுகொலைகளைச் செய்து அதனை விடுதலைப்புலிகள தலையில் போட்டது அனைவரும் அறிந்த விடயமாகும்.

சம்பவம் நடந்த இடத்தில் ஏராளமான ஊர்காவல் படையும் பொலிஸாரு இருந்தும் விடுலைப்புலிகள் மீது எதிர்த்தாக்குதல் நடக்காததுடுதலைப்புலிகள் தான் இதனைச் செய்தார்கள் என்று குற்றம் சாட்டுவதில் எவ்வித உண்மைகளுமில்லை.

சமாதான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கும்போது அதுவும் சமாதானமுயற்சிகளில் முஸ்லிம்கள் முக்கிய பங்குதாரர்களாக இருக்கும் போது புலிகள் இத்தகைய தாக்குதல்களை முஸ்லிம் மக்கள் மீது நடந்தினார்கள் என்பதும் யதார்த்தத்திற்கு முற்றிலும் மாறுகவிருக்கின்றது.

அரசாங்கம் திட்டமிட்ட முறையில் தமிழ் கூலிக்குழுக்களைக் கொண்டு அல்லதுதமது ஆயுதப்படையினரை பல்வேறு வடிவங்களில் உருமாற்றம் செய்து இக்கொலைகளைப் புரியும் அதேவேளையில் வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் பிரச்சார சாதனங்கள் மூலம்பிரச்சாரம் செய்யப்பட்டு உண்மை போன்ற வடிவம் கொடுக்கப்படுகிறது.இத்தகைய சம்பவங்கள் ஏற்கனவே நடந்துள்ளன. அவை பின்னர் நிரூபிக்கப்பட்டுள்ளன. (ரி)

ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படும் பொழுது நிச்சயமாக இது ஒரு தமிழ் தேசத்தினுள், தமிழர் தாயகத்திலுள்ள ஒருஉள்நாட்டு பிரச்னையாக நாங்கள் இதனை அணுகி முஸ்லிம் பிரதிநிதிகளோடு பேச்சு நடத்தி முஸ்லிம் மக்களுடைய கலாசாரத்தை அவர்களுடைய உரிமைகளை பேணக்கூடிய விதமாக இதற்குத் தீர்வுகாணுபோம். (ரி)